

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (11.9.2026) காலை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் "ஆதித்தமிழர் கட்சியின் தலைவர் கு.ஜக்கையன் மற்றும் பொதுச்செயலாளர் விஸ்வைகுமார் அமைப்புச் செயலாளர் திலீபன் மாநில ஆலோசகர் விடுதலைகுமார் ஆகியோர் நேரில் சந்தித்து, நடைபெறவிருக்கும் 2026 சட்டப்பேரவை இடைத் தேர்தலில் தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு ஆதித்தமிழர் கட்சி முழு ஆதரவு அளிப்பதாகவும், இடைத்தேர்தல் நடைபெறும் மதுராந்தகம் மற்றும் தாராபுரம் சட்டமன்றத் தொகுதிக்கு அறிவிக்கப்பட்டுள்ள கழக வேட்பாளர்களின் வெற்றிக்கு ஆதித்தமிழர் கட்சி நிர்வாகிகள் தோழர்கள் முழுமையாக பாடுபடுவார்கள் என தெரிவித்தனர்.

## காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் இன்று (12–ம் தேதி) நடைபெறுகிறது!

# சட்டமன்றத்தில் முதல்வர் விஜயின் அடாவடி - ஆணவப் பேச்சைக் கண்டித்து செங்கல்பட்டில் கண்டன ஆர்ப்பாட்டம்!

## மாவட்டம் முழுவதிலுமிருந்து கழகத்தினர் திரண்டு வரும்படி தா.மோ.அன்பரசன் வேண்டுகோள்!

*காஞ்சிபுரம், செப்.12-*

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் சட்டமன்றத்தில் முதல்வர் விஜயின் அடாவடி - ஆணவப் பேச்சைக் கண்டித்து இன்று 12-ஆம் தேதி செங்கல்பட்டில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது என்றும் இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாவட்டம் முழுவதிலும் இருந்து கழகத்தினர் திரண்டு வந்து பங்கேற்கும் படி மாவட்டச் செயலாளர் - முன்னாள் அமைச்சர் தா.மோ. அன்பரசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:-



காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் தமிழ்நாடு சட்டமன்றத்தில் மிகவும் அருவெறுக்கத்தக்க வகையில் சட்டமன்ற மாண்புகளை மீறி, மறைந்த தலைவர்களை களங்கப்படுத்தும் வகையில் பேசிய முதல்வர் விஜயின் அடாவடி - ஆணவப் பேச்சைக் கண்டித்து இன்று 12-ஆம் தேதி சனிக்கிழமை காலை 10.00 மணியளவில் செங்கல்பட்டு, பழைய பேருந்து நிலையம் அருகில் எனது (தா.மோ.அன்பரசன்) தலைமையிலும், மாவட்டக் கழக அவைத் தலைவர் த. துரைசாமி, மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் - முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் இ.கருணாநிதி, வரலட்சுமி மதுசூதனன், து. மூர்த்தி மற்றும் மாவட்டப் பொருளாளர் வெ.விசுவநாதன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ளது.

இக்கண்டன ஆர்ப்பாட்டத்தை முடித்து வைத்து கழகப் பொருளாளர் - கழக மக்களவை குழுத் தலைவர் டி.ஆர். பாலு கண்டன உரையாற்றுகிறார்.

கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, கழக தீர்மானக்குழு செயலாளர் மீ.அ.வைதியலிங்கம், தாம்பரம் மாநகரச் செயலாளர் எஸ். ஆர்.ராஜா, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் வீ.தமிழ் மணி, எல்.இதயவர்மன், வி.என்.பி.வெங்கட்ராமன், மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் படப்பை ஆ.மனோகரன், தாம்பரம் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ்,

தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஜி.சி.அன்புச்செழியன், க.அன்புச்செல்வன், கழக அணிகளின் மாநில நிர்வாகிகள் பி.டி.சி.ஜி.செல்வராஜ், இரா. பொன்னுராம், ஆதிமாறன், அ.தமிழ்மாறன், என்.நவீன், சாய்ஜெய்காந்த் பாரதி, ஆர். எஸ்.கிருத்திகா தேவி, ஒன்றியச் செயலாளர்கள் எஸ்.டி.கருணாநிதி, ந.கோபால், பையனூர் எம்.சேகர், ஏ.வந்தேமாதரம், ஆப்பூர் பி.சந்தானம், ஜி.கே. ரவி, எம்.டி.லோகநாதன், திருமுடிவாக்கம் இ.மணி, கே.பி. ராஜன், நகரச் செயலாளர்கள் ஜெ.சண்முகம், எஸ்.நரேந்திரன், டி.பாபு, எஸ்.ஜபருல்லா, கோ.சத்தியமூர்த்தி, எம்.கே.டி. கார்த்திக், ஆர்.சதீஷ்குமார், த.வினோத்குமார், பேரூர் செயலாளர்கள் மு.தேவராஜ், ஜி.டி.யுவராஜ்,

பகுதி கழகச் செயலாளர்கள் என்.சந்திரன், பி.குணாளன், வே.கருணாநிதி, இ. ஜோசப் அண்ணாதுரை, த.ஜெயக்குமார், பெருங்களத்தூர் எஸ்.சேகர், எஸ்.இந்திரன், டி.காமராஜ், மாடம்பாக்கம் ஆ.நடராஜன், ஏ.கே.கருணாகரன், இரா.சுரேஷ், இ.எஸ். பெர்னாட்,

தலைமைப் பொதுக்குழு உறுப்பினர்கள் எம்.எஸ். கே.இப்பிராகிம், ஆர்.டி.பூபாலன், எம்.ஆர்.சீனிவாசன், ஆர். எஸ்.சங்கர், க.தேவேந்திரன், எஸ்.சதீஷ், கே.எத்திராஜ், எம். செல்வகுமார், மா.கணேஷ் பாபு, சே.அருள்தேவி, இரா. பாஸ்கரன், மு.ரஞ்சன், ஜிஜேந்திரன் ராமு மற்றும் எம்.கஜனா (எ) கஜேந்திரன், துரை சண்முக மணிகண்டன், மனோகரி சண்முகம் உள்ளிட்ட கழகத்தினர் இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்று சிறப்பிக்க உள்ளார்.

தொடக்கத்தில் செங்கல்பட்டு நகரச் செயலாளர் எஸ். நரேந்திரன் அனைவரையும் வரவேற்று பேசுகிறார்.

முடிவில் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் எல்.பிரபு ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

இன்று 12-ஆம் தேதி செங்கல்பட்டில் நடைபெறும் இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்வது 'நமது உரிமை' 'நமது கடமை' என்ற லட்சிய உணர்வோடு காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள ஒட்டு மொத்த கழகத்தினரும் ஆயிரக்கணக்கில் அலைகடலென திரண்டு வந்து பங்கேற்க வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கூறியுள்ளார்.

# நெருப்பிலே ஜனிக்கும் கவிஞன் பாரதி!

திருவல்லிக்கேணி மயானத்தில்
எரியுண்டான் பாரதி
இந்நாளில்

ஒரு பென்சில்போல்
கிடந்த உடலை
எரிக்கப் பார்த்து
ஏமாந்தது நெருப்பு

அண்டத்தின்
மறுபக்கம் பார்த்த கண்களை

விண்ணைத் துழாவிக்
காற்றைச் சாடிய கைகளை

சூரியனை
முடித்துவைத்திருந்த மூளையை

இந்தியத்தை
ஏந்திவந்த இதயத்தை

செந்தமிழ் பேசிப் பேசிச்
சிவந்த நாவினை

உடல் இளைத்தாலும்
உருவிளைக்காத மீசையைத்

தின்று முடித்தது
தீரா நெருப்பு

ஏ தீயே!

அவன்
மாமிசம் எரித்தாய்;
மனசை எரிப்பாயோ?



கட்டை எரித்தாய்;
கவிதை எரிப்பாயோ?

இறப்பிலே முடிகிறான்
மனிதன்
நெருப்பிலே ஜனிக்கிறான்
கவிஞன்!

**கவிப்பேரரசு வைரமுத்து**



## சட்டமன்றத்தில் முதல்வர் விஜய் ஆணவப் பேச்சு! சைதாப்பேட்டை –

# கண்டன ஆர்ப்பாட்டத்தில் மயிலை கிழக்குப் பகுதி நிர்வாகிகள் பங்கேற்பீர்!

## பகுதிச் செயலாளர் எஸ்.முரளி வேண்டுகோள்!

*சென்னை,செப்.12-*

இன்று (12.09.2026 சனிக்கிழமை) காலை 9.30 மணியளவில் சைதாப்பேட்டை கலைஞர் நூற்றாண்டு நுழைவு வாயில் அருகில் த.வெ.க.தலைவர் விஜய் சட்டமன்றத்தில் ஆணவமாக பேசியதை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் சென்னை தென் மேற்கு கழக செயலாளர் மயிலை த.வேலு தலைமையில் நடைபெறுகிறது.

ஆகவே இந்நிகழ்ச்சிக்கு மயிலை கிழக்குப் பகுதியை சார்ந்த மாநில, மாவட்ட, பகுதி நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் பகுதி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், வட்ட கழக நிர்வாகி கள், BLA 2, BDO, BDA நிர்வாகிகள் மற்றும் கழக முன்னோடிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு பகுதிச் செயலாளர் எஸ்.முரளி தெரிவித்துள்ளார்.


